1214

உ

கணபதி துணை.

எட்டுக்குடி ஸ்ரீ சிவசுப்பிரமண்ய சுவாமிபேரில்
பலமெட்டுகளடங்கியதாகிய

# கோலாட்ட கீர்த்தனை.

நெ. 11.

OFFICE OF THE REGISTRAR
19 JUN 1925
MADRAS
87



இஃது
திருவாரூர் சமீபத்திலுள்ள புதுப்பத்தூர்
**A. S. துரைசாமி பிள்ளை அவர்கள்**
இயற்றியது.

சென்னை S. துரைசாமி முதலியாரவர்களால்
பார்வையிடப்பட்டு,
சென்னை - சூளை,
ஸ்ரீ "பாரதி" அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.
1925-26.

[விலை அணா 2.

926:38.211 EJ
N25
181599

# இனிய தமிழ் நாவல்கள்.

| | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| தலைவாங்கி அபூர்வசிந்தா | 1 | 0 | ஜயலட்சுமி | 0 | 8 |
| தயாபரசுந்தரி [மணி | 0 | 12 | சற்பகவல்லி | 0 | 8 |
| கமலவல்லி அல்லது கன்னி | | | விவேகானந்தன் | 0 | 6 |
| மின்சமர்த்து முதல்பாகம் | 1 | 12 | சுந்தராம்பாள் | 0 | 6 |
| ஷை இரண்டாம் பாகம் | 1 | 12 | பொன்மலைப் புதுமை | 0 | 12 |
| இருகொலைகளின் இரகசியம் | 1 | 0 | பூபாலன்புவனசுந்தரி | 0 | 6 |
| வசீகரன் [கொலை | 0 | 12 | அனந்தரங்கன் | 0 | 10 |
| சௌந்தராபாய் அல்லது சதி | 1 | 0 | மோகனவல்லி | 0 | 6 |
| தனபதி | 0 | 8 | மதனமஹேஷரி | 0 | 6 |
| இளங்கோவன் அல்லது | | | தடிராமன் | 0 | 6 |
| தவளமலைசுரங்கம் | 1 | 4 | வாயாடிவம்பன் | 0 | 4 |
| புவனராணி | 0 | 8 | சுகுணசுந்தரி | 0 | 8 |
| தங்கவேணி | 0 | 4 | மோஹன்சிங் | 0 | 12 |
| விவேகானந்தபோதம் | 0 | 10 | உத்தரகுமாரன் | 0 | 8 |
| சிவசாமி | 0 | 8 | ஜீமூதவாகனன் | 0 | 8 |
| பங்கயச்செல்வி | 0 | 12 | மனுச்சோழன் | 0 | 8 |

## ஸ்ரீ வேங்கடேச பராக்கிரமம்.

ஸ்ரீ வேங்கடேசப் பெருமானுடைய வைபவங்களையும் அவர் எழுந்தருளி யிருக்கும் சிறப்புகளையும் அம் மலையின் கண்ணுள்ள தீர்த்தங்களின் பிரபாவங்களையும் இதில் விவரித்திருப்பதுடன் நான்கு யுகங்களிலும், விருடபகிரி, சேஷகிரி, அஞ்சனாத்திரி, வேங்கடாசலம் என்ற நான்குபெயர்கள் உண்டான காரணங்களையும் சாங்கோபாங்கமாய் எடுத்துக் காட்டியுள்ளன. ஸ்ரீ வேங்கடேசப் பெருமானுடைய பராக்கிரமங்கள் யாவும் இதில் அடங்கி யிருப்பதால் ஒவ்வொருவருக்கும் இது மிகவும் அவசியமானது. விலை ரூபா 1.

## அவுட்டுச் சிரிப்பு.

கனவான்களே அவுட்டுக் கிளம்புவதுபோலத் தொந்தி குலுங்கச்சிரித்து ஆனந்தமாக பொழுது போக்கவேண்டுமானால் "திடீர்ப்புளுகன்" கதையை வரவழைத்து வாசியுங்கள். விலை அணா 6.

984 0562
1516
OFFICE OF THE REGISTRAR ... JUN 1926

உ

# ஸ்ரீ சுப்பிரமண்ய சுவாமிபேரில்

# கோலாட்டக் கீர்த்தனை.

---

### விநாயகர்துதி வெண்பா.

எத்திசையோரும்புகழும் எட்டுகுடிவேலர்மேல்
பத்தியுடன்கீர்த்தனைகள் பாடுதற்கு—புத்தியருள்
கொம்பொடித்துப்பாரதத்தை குன்றுதனில்வரைந்த
தும்பிமுகன் பாதந்துணை.

## 1. ஷை கீர்த்தனை.

பல்லவி.

வாவா இதுதருணம் வல்லபை சமேதனே வாவா

சரணுநுபல்லவி.

1 தேவாதிதேவனே சிந்தூரமணிந்தவனே
சிந்தைமகிழ்ந்துநான் பைந்தமிழோதிட
எந்தன்மனதினில் இந்தவேளைதன்னில். (வாவா)

2 அப்பம்சுழியன்வடை அதிரசமுஞ்சுண்டல்வகை
ஆவலுடன்வைத்துன் சேவடிபோற்றினேன்
தேவனேயெந்தனின் பாவவினைதீர்க்க. (வாவா)

3 வெத்திவேலேந்திவரும் வேலாயுதன்புகழை
பத்தியாய்பாடிட சித்திபுத்தியுடன்
நித்தியம்வாக்கருள் சத்தியின்பாலனே. (வாவா)

4 வரையிலெழுதியருள் வாசசாமகோசரனே
முறையிடுகின்றஎன் குறையதுநீங்கிட
துரைசாமிசெந்தமிழ் தரைமீதிலோங்கிட. (வாவா)

---

## 2. சரஸ்வதி துதி.

செந்தாழம்பூ என்றமெட்டு.

தாமரைமலர்மீதில்வாழும் தாயேகலைவாணியே

1 மாமறையோர்துதிக்கும் மாதேசரஸ்பதியே
மனமகிழ்ந்திட-சினமுறாமலே
தினமும்என்மனந்-தனில்நடமிடும். (தாமரை)

1:81599



2 வேலாயுதன்சரிதை விருப்பமுடன்பாடுதற்கு
வேண்டினேனுன்னை - ஆண்டருள்புரி
தாண்டிசெந்தமிழ்-நீண்டிடவருள். (தாமரை)
3 நான்முகனின்நாவிலுறை நாயகியேவந்தருள்செய்
நாடிவந்தனைதேடியுன்னடி-வாடித்தினமும்
பாடித்துதித்தேன். (தாமரை)
4 மலையைக்குடிபிடித்த மாலின்மருமகளே
மறைமுதல்வியே விரைவில்வருவாய்
துரைசாமித்தமிழ்க் குறைதீர்த்தருள்வாய் (தாமரை)

## 3. முருகர் துதி.

பழனிமாமலைதனில் என்றமெட்டு.

அஷ்டத்திசைபுகழும் எட்டுகுடிவேலா (அஷ்ட)
1 எட்டுகுடிவேலா யீஸ்பரியின்பாலா
சிட்டுமயில்மீதேறும் சிங்காரவேலா. (அஷ்ட)
2 பிட்டுக்குமண்சுமந்த பேயாண்டிமகனே
பேதையான்செய்தபிழை பொருப்பதுன்கடனே
3 அசுரர்க்குலக்கருவை யழிக்கவந்தவனே
அண்டினேன்உந்தன்பதம் ஆதரிக்குகனே (அஷ்ட)
4 வள்ளிதெய்வானையுடன் மயிலேரிவருவீர்
மைந்தன்குறையகற்றி வரமதுதருவீர். (அஷ்ட)
5 துஷ்டர்தனையடக்கும் சிவசுப்பிரமண்யா
கஷ்டமடையுமென்னை காத்தருள்புண்யா. (அஷ்ட)
6 சத்திவேலேந்திவரும் சண்முகநாதா
சரணம்புரிந்தேனுன்னை தாமரைப்பாதா. (அஷ்ட)
7 சூரசம்மாரஞ்செய்த சுடர்வடிவேலா
சுந்தரிவள்ளிதெய்வ யானைமணாளா. (அஷ்ட)
8 அரைநொடிதன்னிலென்முன் ஐயனேவருவாய்
துரைசாமிக்குன்தனிரு தாய்மலர்தருவாய் (அஷ்ட)

4. அம்பிகா உன்மகன் என்றமெட்டு.

அம்பிகையீன்றபாலகன் ஆறுமுகமானவேல்வன்

 181599

1 தம்பிமுகற்க்கிளையவேலன் சுந்தரிவள்ளிமணாளன்
கும்பமுனிக்கருள்செய் லோலன்
குருவே-மருவே-திருவே-வருவாய். (அம்பி)
2 புள்ளிமயிலேரும்நாதன் பூவுலகோர்போற்றும்பா
துள்ளிவரும் அசுரர்தீதன் [தன்
தூயன்-நேயன்-பேயன்-சேயன். (அம்பி)
3 சோதிவடிவேல்பிடித்தோன் துலங்குஞ்சூரர்தனைம
மாதினுடன் தில்லைநடித்தோன் [டித்தோன்
மைந்தன்-கந்தன்-எந்தன்-சொந்தன். (அம்பி)
4 மறைநான்குமேயுணர்ந்தோன் மாமுனிவர்க்கருள
திரைசாமிக்கருள்புரிந்தோன் [சுரந்தோன்
வீரன்-மாரன்-தீரன்-கோரன். (அம்பி)

---

## 5. மன்றுளாடியவா என்றமெட்டு.

வேலனேசரணம் (வடி) வேலனேசரணம்
விண்ணுலகத் தவர்போற்றிடும்
மண்ணுலகோர் தொழுதேற்றிடும். (வேலனே)
1 நீலமயிலேரும் குஞ்சரிபாகனே
நித்தன் உனைத்துதித் தோற்கனுகூலனே
சூலம்மழுமான் தரித்தவன்பாலனே
சுந்தரனே எந்தனையாள்
சந்ததங்கசொர் கெந்தவடி. (வேலனே)
2 வள்ளித்தினைப்புனந் தன்னிலேசென்றவா
வயருபசிக்குதென்று கெஞ்சிநின்றவா
அள்ளியள்ளித்துதினைமாவை தின்றவா
ஐயனேநீ மெய்யெனநான்
கைகுவித்தேன் செய்வினைதீர் (வேலனே)
3 தாருகன்றன்னை க்ஷணத்தில்வதைத்தவா
தம்பியானசூரர் மாளச்சிதைத்தவா
போருக்குவந்தோரை வெட்டிச்சதைத்தவா
பொன்னுலகோர் தொழுதேற்றிட
கண்ணுடையிந்திரன் வாழ்த்திட. (வேலனே)

4 அரைநொடியில் கயிலாயஞ்சுற்றிவந்தாய்
அன்பர்க்குறையை யகற்றியருள் தந்தாய்
துரைசாமிபாடிடும் பாடலுக்குகந்தாய்
சோதிவடிவேலவனே ஆதிசிவன்பாலகனே. (வே)

### 6. பாளைவாய் கமுகில் என்றமெட்டு.

ஆலவிஷமுண்டயீசன் பாலகனே எந்தனையும்
ஆதரித்தருள்புரிய வாருமே-உன்னை
அண்டிவந்தேன் என்குறையைத்தீருமே. (1)

நீலமயிலேறியன்று கோல்விழிவள்ளியரை
நேர்மையுடன் சென்றணைந்தநாதனே-எந்த
நேரமதிலுமென்னைக்கார் நீதனே. (2)

சத்தியாள்உமக்குயீந்த வெத்திவேல்கரத்தமைந்த
சண்முகனேவாரும் மயிலேறியே-கெட்ட
துன்முகனை கொன்றுயன் றுசீரியே. (3)

எட்டுகுடிவேலவனே சிட்டுமயிலேரி என்முன்
இக்ஷணத்தில்வந்து அருள்செய்குவாய்-பக்தன்
ஏழைதுரைசாமிக் கருளுய்குவாய். (4)

### 7. மணிதிகழ் கிண்கிணி என்றமெட்டு.

சிவபெருமான் நுதல்பொரியில் ஜெனித்தவடிவேலா
சாமி ஜெனித்தவடிவேலா-திருச்
செந்திநகர்வாழ்ந்திடுஞ் சிங்காரவடிவேலா. (1)

கவணெரியுங்குரவள்ளியைக் கலந்தணைந்தவடிவேலா
சாமி கலந்தணைந்தவேலா-கண்டி
கதிர்காமம் பழணிமலைவாழும் வடிவேலா. (2)

நவவீரர்சூழ்ந்திடவே நாடிவரும்வேலா
சாமி நாடிவரும்வேலா-சிவ
நாதனுக்குப் பிரணவமுரைத்த வடிவேலா. (3)

தவமுனிவர்க் கருள்புரியுஞ் சண்முகனேவேலா
சாமி சண்முகனேவேலா-அருள்
சுவாமிமலைத் தணிகைமலைசார்ந்த வடிவேலா. (4)

குவலயத்தோர் துதித்தேற்றுங் குண்ணக்குடிவேலா
சாமி குண்ணக்குடிவேலா-எங்கள்
குறையனைத்துந்தீர்த்தருளும் குழந்தைவடிவேலா. (5)
எவரும்வந்துன் அடிபணியும் எட்டுகுடிவேலா
சாமி எட்டுகுடிவேலா-பாலன்
எளியன்துரைசாமி தமிழ்கின்பமுறும்வேலா. (6)

8. ஆண்டிபண்டாரம் என்றமெட்டு.

ஆறுமுகனே என்னையாளுங்குகனே தணிகை
ஆறுமுகனே என்னையாளுங்குகனே.

1 வேறுகெதியெனக்கு வேலவனேயாருமில்லை
பாருங்கடைகண்ணினல் பாவியெனை இப்பொழுது
2 சேவல்கொடிபிடித்த சிங்காரவேலவனே
ஆவலாய்ஓடிவந்தேன் ஆதரித்தருளுமையா. (ஆரு)
3 வள்ளிதெய்வானையுடன் புள்ளிமயிலேறிவந்து
துள்ளிவருஞ்சூரர்களை துணித்தவடிவேலனே. ()
4 வரையைக்குடைப்பிடித்த மாலின்மருமகனே
துரைசாமிபாடுந்தமிழ் சிந்தைமகிழ்ந்தாண்டருள்
[செய்.

9. தெள்ளுதமிழ்க்குதவும் என்றமெட்டு.

புள்ளிமயிலேறிவரும்வேலா இந்த
பூவுலகோர்போற்றும் உமைபாலா உந்தன்
பொன்னடியை என்னுடைய சென்னிமிசை
சூடவருள் புண்யா சுப்பிரமண்யா. (1)
ஆறுமுகமானகுருநாதா என்னை
ஆதரித்தருள்புரிபொண்ணுதா இனி
காருமென்றுன்துபாதம் காதலுடனேபணிந்தேன்
காராய் முகம் பாராய். (2)
எட்டுகுடிவாழும்முருகையா இப்போ
என்கவலைதீர்த்தருளும்மெய்யா அன்று
பிட்டுக்குமண் சுமந்தடிபட்டவன்மகனே அருள்
செய்யா முத் தையா. (3)

ஆலவிஷமுண்ட யீசன்மைந்தா உன்னை
அண்டிவந்தேன் காத்தருளுங்கந்தா-சிறு [தேறி
பாலன் துரைசாமியுன்மேல் பாடினேன் மயில்மீ
வந்தாள் வரந் தந்தாள். (4)

10. செந்தமிழையுலகில் என்றமெட்டு.

ஆலவிஷத்தையுண்ட நீலகண்டன்மகனே
ஆதரித்திரிடவருவாய்-உனதுபாதம்
அடியேனுக் கருள்புரிவாய்

அர்ப்புதமாகிய சர்க்குருநாதனே
பொர்ப்பதந்தன்னையெனக் கருள்செய்திடும்

ஆதித்திருமால்மருகா உந்தனைக்காண
ஆவல்கொண்டேன்நான் முருகா. (1)

சூரர்க்குலக்கருவை வேரோடருக்கவந்த
சுப்பிரமண்யனேகாருமே-உனைநினைந்தேன்
துன்பம்வராமல் பாருமே

சுந்தரிவள்ளி தெய்வானைகளுடனின்று
சந்ததம்காத்திடசமயமும் இதுநன்று

சுத்தசைத்தன்னியரூபனே உனைபணியும்
பக்தனைக்கார் பார்த்திபனே. (2)

ஆதிப்பிரணவத்தை நீதியுடனேயன்று
அரனுக்குரைத்தநாதனே அடியன்துயர்
அகற்றுவாய் மலர்ப்பாதனே.

ஐயனேஉந்தனை-மெய்யெனதொழுதிட
செய்திடும்வினைகளும் கைகுவித்தோடிட

அடியேனுக்கருள்வடிவேல்-உந்தனருளால்
ஆனந்தங்கொண்டேன் இனிமேல். (3)

செட்டிவடிவம்பூண்ட எட்டுக்குடிவேலனே
சிறுவனைக்காத்தருளுவாய் அடியேனுந்தன்
சேவடிதொழ வருள்வாய்

சிறையினில்தேவர்கள் முறையிடும்வேளையில்
அரைநொடிபோதினில் அசுரரைவதைசெய்த
சிங்காரவடிவேலனே உந்தன்மேல்பாடும்
துரைசாமிக் கருள்சீலனே. (4)

11. துடிக்கும்மயிலின் என்றமெட்டு.

அரக்கர்குலத்தை யழிக்கவந்தவனே திருத்தணிகை
ஆறுமுகமாய் அமர்ந்தசண்முகனே [நகரில்
ஆவலுடனென் பாவவினைதீர்
சேவலங்கொடி தாவும்வேலனே
அன்பனெந்தனைக் காத்திடுந்திருவே மயில்மீதேறும்
அன்னைகுஞ்சரியோடுறைதிருவே. (1)

குரக்குலந்தனில் உதித்தவள்ளிதன்னை நாரதரிஷி
கொடுத்தபடத்தின் உருவங்கண்டுதினைக்
கொட்டகைதனில் கட்டிசேரென
பட்டபகலில் வேடுவர்வர
கொண்டீர்வேங்கைமரமாய்நின்றவனே உனதுபாதம்
கோரினேன்வரந் தருகுவாய்குகனே. (2)

தேவருக்கிடர்புரியும்ராக்ஷதரை அரைநொடிதனில்
சிதரஅடித்து அமரர்தன்னைச் சிறை
தீர்த்துவிடுத்த கார்த்திகேயனே
மூர்த்திக்குஉரை செய்தநேயனே
சீக்கிரம்மயில்மீதில்ஏறியே அடியேனுக்கொரு
சிறுவனுதிக்க அருள்வாய்தேரியே. (3)

மறைமுதல்வனைச்சிறையடைத்தவனே உனதுசெந்தா
மரைப்பதந்தன்னை துதித்தேன்சண்முகனே
வரையைக்குடையாய் பிடித்தோன்மருகா
துரைசாமிக்கருள் புரிவாய்முருகா
வள்ளிதெய்வயானைதன்னுடனே அடியேன்முன்னே
வந்தருள்செய்ய வேண்டினேன்குகனே. (4)

## 12. ஆருமுகா என்னைகாரும் என்றமெட்டு.

பல்லவி.

வேலவனேவினை தீரும் திருமையா தினம் [மும்
விண்ணவர்முனிவர்தொழுங் குண்ணக்குடிமலைவா
வேலவனேவினை தீரும் திருமையா.

சரணங்கள்.

ஆலகாலந்தன்னையுண்டோன் பாலகனேயெந்தனையும்
ஆதரித்தருள்புரியும் வடிவேலா
கோலமயில்மீதிலேரி பாலகனென்முன்வருவீர்
குமரகுருபரனே அருள்சீலா
கோலவிழிவள்ளியரைக் கூடிடும்மனோகரனே
ஓலமிட்டழுதுநின்றேன் காலதாமதஞ்செய்யாதே. ()

மைந்தனில்லாப்பாவியென்று விந்தையானவசைவே
கேழ்க்கவடிவேலனே யுன்மனமிரங்காதா
பைந்தமிழால் உந்தன்மீதில் பாடிடவருள்புரிவாய்
பாலசுப்பிரமண்யனே இன்னமும்வாதா
சந்ததியெனக்கருள்வாய் சண்முகவடிவேலனே
உந்தனிருபாதமதை உறுதியென்றேன் சீலனே (வே)

எந்தனுக்குச் சந்ததியருள்புரிய வேண்டிநின்றேன்
எட்டுகுடிமானகர் வாழ்முருகேசா
சுந்தரிவள்ளிதெய்வானை எந்தநேரம்சூழ்ந்திடவேன்
பந்தபாசமகற்றிடும் மலர்வாசா
கந்தனேயுன்பாதமதை சிந்தையில் தினந்துதித்தேன்
இந்தவேளைவந்துஎந்தன் சிந்தைகலிதீர்த்தருள்வாய்.

வரையைக்குடைப்பிடித்தோன் மருமகனுகவந்த
வடிவேலனே யுனதுபதம்போற்றி
துரைசாமிபாடுந் தமிழ்க்கருள்செய்ய
வேண்டிநின்றேன் சோதிவடிவேலனைத்தினம்ஏற்றி
மறையோதிடும் பிரமன்மைத்துனனுனவேலா
அரைநொடியில்வருவாய் அன்னைபார்வதிபாலா (வே)

## 13. செந்தாழம்பூ என்றமெட்டு.

கந்தா உந்தன் பாதமலரைக்
கருதித்தினமும் போற்றினேன். (கந்தா)

1 இந்திராதிதேவர்தொழும் எட்டுகுடிவேலவனே
ஏற்றினேன் மலர்தூற்றினேன்-பட்டு
சாற்றியுன்னடி-போற்றினேன்தினம். (கந்தா)

2 வந்தாதரித்திடுவாய் வள்ளியின்மனோகரனே
வருவாய்வரமுந் தருவாய்-எந்தனின்
குருவாய்வந்தருள்முருகா என்முனம். (கந்தா)

3 சூரசம்மாரவேலா தும்பிமுகற்கிளையசீலா
தூயனே கார்த்திகேயனே-அரன்
சேயனே மலர்வாயனேதினம். (கந்தா)

4 அரைநொடிப்போதில்வந்து துரைசாமிக்கருள்தந் [து
ஆதரித்துந்தன் பாதமலரை
ஓதவருளும் நாதனேஅருள். 181599 (கந்தா)

## 14. என்னடிநான்பெற்ற என்றமெட்டு.

சிக்கல்வாழ்சிங்காரவேலா-உமைபாலா-அருள்சீலா-
வள்ளிதெய்வயானை மணவாளா [த்திட
சிறியேன் துயர்தனை மாற்றிட- வருவோரிடர்தனை தீர்
சித்தம்வைப்பாய் சுப்பிரமண்யா உந்தன்
பக்தனைக்காத்திடும்புண்யா

வளையல்தனைச்சுமந்தேகி-சென்றயோகி மதியூகி
அன்று வள்ளிப்புனமதிலேகி
வாதுமொழிபேசிடவே-கோதையவள்ஏசிடவே
வம்புவார்த்தைசொன்னநாதா உன்னை
நம்புமடியேன் மேல்வாதா

பத்தரைமாற்றுள்ளமேனி-ருசிசீனி-ஸ்ரீகல்யாணி
பெற்ற பாலதெண்டாயுதபாணி [னைனை
பன்னிருகையுடையவனே-உன்னிருதாள்பணிவே

பாதுகாத்தாண்டருள்ஐயா மன
வேதனைதீர் முருகையா

வேலவன்பாதத்தைப்போற்றி மலர்தூற்றி தீபமேற்றி
நின்றேன் வேண்டியபாமாலைசாற்றி
வேதனைகள்நீங்கிடவே பாதகம்பின்வாங்கிடவே
விரைவாய்வரவேணும்கந்தா பாலன்
துரைசாமிகோரும் வரந்தா

15. அள்ளியள்ளிகுடிக்கும் என்றமெட்டு.

எட்டுகுடியில்வளர் யீசாஉன்பாதமே
ஏற்றிப்பணிந்தேன்நீதமே-சங்கீதமே
எங்கும்புகழ்களோங்குமே

எங்களையாண்டருள்-சங்கரன்பாலனே
செங்கதிர்வேல்கொண்ட-சிங்காரவேலனே. (எட்டு)

கட்டிக்கரும்பேஎந்தன் கற்கண்டுசீனியே
காத்திடுவாயுன்காணியை-தெண்டபாணியே
காணரிதாம் உன்மேனியே

கந்தனேஉந்தனை-எந்தநேரத்திலும்
சிந்தனைசெய்திட பந்தவினைகள்போம். (எட்டு)

காவடிகொண்டடியார் சேவடிபோற்றிட
கர்ப்பூரதீபமேற்றிட-உனைவாழ்த்திட
கவிமாலைகொண்டு சாற்றிட

காங்கேயனேஎன்னை-கண்ணினால்பாத்தருள்
வேங்கைமரமாகி நின்றவாகாத்தருள். (எட்டு)

புள்ளிமயில்மீதேறும் வள்ளிமணாளனே
புவியோர்வணங்கும்சீலனே வடிவேலனே
பொன்னடிபோற்றும் பாலனே

பூமியிலேதுரைசாமிக் கருள்தாரும்
தாமிதமில்லாமல் தமியனைக்கண்பாரும்
எட்டுகுடியில்வளர்யீசா உன்பாதமே.

## 16. இடும்பன் துதி-மஞ்சுரிகர் என்றமெட்டு.

எட்டுகுடிவாழ்இடும்பையா-உனதுபாதம்-மனதில்நித
எண்ணியேதுதித்தேன் நான்மெய்யா [ம்
ஏற்றியுன்னடி-போற்றியேமலர்
சாற்றிதிருவிளக்-கேற்றிநின்றிட
எந்தனைக்காக்கவேவருவாய் இடர்களைந்து திடமுட
இருப்புத்தடிதூக்கிவிரைவாய் [னே
தட்டிச்சல்லடங்களணிந்து-எதிரிகளை வதைபுரிய
தண்டாயுதம் தாங்கிப்பணிந்து
தவமுனீஸ்வரர் அருமைசீஷனே
எவருமுனதடி போற்றும்பாதனே
தடதடென்றுஓடிவருவீர்-அடியேன்முன்னே குருவே
தாமரைநிகர்த்தபாதனே [சொன்னேன்
மைந்தனில்லாப்பாவியென்றென்னை-பலருமேச-வசை
மானிலத்தில் என்மனங்கூச [கள்பேச
மன்னர்மன்னர்கள் போற்றுமீசனே
குன்னக்குடிமலைவாழும்நேசனே
மைந்தன்எந்தனுக்கருளுவாய் தினம்பணிந்தேன் மன
வந்தெனைக்கார் இடும்பேசனே [ந்துணிந்தேன்
சாம்பிருணிவாடைபிடித்து-எதிரிருக்கும்-மதுகொடு
சாருயம்உஸ்கிகள் குடித்து [க்கும்
சாமியுன்னடியார்கள் தொழுதிட
பூமியுள்ளவர் பிணிகளழுதிட
தாட்டிகமாகவேவருவாய்-துரைசாமியுன்-தமிழ்ப்பதி
தரையின்மிசை ஓங்க அருள்வாய் [கம்

## வாழி விருத்தம்.

குஞ்சரமுகத்தோன் வாழி
குகன்தெய்வயானை வாழி
வஞ்சியாம்வள்ளி வாழி
மாலயன் அரனும் வாழி
தஞ்சமென்றென்னைக் காக்கும்
சுவாமிவல்லிடும்பன் வாழி
பஞ்சையானுரைத்த பாடல்
படிப்பவர்கேழ்ப்போர் வாழி

ஸ்ரீ சுப்பிரமயண்ய சுவாமி கோலாட்ட கீர்த்தனை
முற்றிப்பெற்றது.

---

இதைப்போல் இன்னும் பலவித புஸ்தகங்கள் ஷை யாரால் கூடியசீக்கிரம் வெளிவரும் தற்சமயம் விர்ப்பனைக்கு தயாராக இருக்கும் புஸ்தகங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| கந்தபுராண காவடிச்சிந்து | .... | 0 | 1 | 0 |
| தக்ஷணாமூர்த்தி சரித்திரம் | .... | 0 | 1 | 9 |
| சு-பஞ்சரெத்தினமாலை | .... | 0 | 0 | 6 |
| திருவிளையாடல் காவடிச்சிந்து | .... | 0 | 1 | 0 |
| மாரியம்மன் பதிகக்கும்மி | .... | 0 | 0 | 6 |
| பங்குனி உத்திரபாசுரம் | .... | 0 | 1 | 0 |
| சுப்பிரமண்யர் கோலாட்டகீர்த்தனை | .... | 0 | 2 | 0 |

வேண்டியவர்கள் நேரிலும் வி. பி. மூலமாயும் பெற்றுக்கொள்ளலாம்.

இப்படிக்கு
A. S. துரைசாமி பிள்ளை.
புக்சலர் புதுப்பத்தூர்.
தப்பிளாம்புலியூர் போஸ்ட்டு,

181599

## இந்து தேகாப்பியாச சாதனம்.

இது தேகதத்துவ அவயவங்களின் அத்தியாவசியத்தை தெரிவித்து சரீரத்தை பலமாகவும், சௌக்கியமாகவும் போஷிப்பதற்கான அப்பியாச முறைகளை படங்களுடன் விவரித்திருக்கின்றது. இதன் விலை அணா 0 8 0

**ஸ்ரீராம பராக்கிரமம்:**— இது ஓர்சிறந்த பக்திநூல். பாலர் பாலிகைகள் முதல் சகலரும்எளிதில்வாசிக்கத்தகுந்தசெந்தமிழ்நடையில் இராமாயணம்முழுசரித்திரமும் அடங்கியுள்ளது. அணா 6.

**நவரத்தின ஒப்பாரி:**—இதில் ஸ்திரீகள் துக்கிக்கும் ஒப்பாரிகளும், மன்மதன் ரதி வாக்குவாதமும், இரதிதேவியின் புலம்பலொப்பாரியும் மன்மதன் எரிந்தான் எரியவில்லை யென்ற சந்தேக நிவர்த்தி லாவணியு மடங்கியிருக்கின்றது.
விலை அணா 5.

**ஸ்ரீகேதாரீஸ்வர விரதமகிமை** இப் புத்தகம் ஒவ்வொருவரிடமும் அவசியம் இருக்க வேண்டும். விலை அணா 2.

**பழனியாண்டவர் பக்திரசக் கீர்த்தனம்:**—நவீன டிராமெட்டில் திருப்புகழ் சந்தப்பாக்களும், நூதனவர்ண மெட்டுகளும் நிரம்பப்பெற்றுள்ளதால் எல்லாராலும் புகழப்பெற்றது. அணா 4.

**இல்லறமாலிகா:**—இதில் சகலரும் அநுஷ்டித்து வரும் பண்டிகை, நோன்பு, விரதம் முதலியவைகளின் சவிஸ்தாரத்தை விளக்கியிருப்பதால் ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம்இருக்க வேண்டிய ஓர் சிறந்த பொதுநூல். விலை அணா 6.

**டெய்லரிங் அண்டு கட்டிங்:**- கோட்டு முதலிய உடுப்புகளை வெட்டுவதற்கான பிளான்களும், கணக்குகளும் உள்ளது. விலை ரூ 1.

## அடங்காச் சிறிப்பு.

நண்பர்களே ! நீங்கள் ஓயாமல் சிரித்துக்கொண்டிருக்க வேண்டுமானால் மலையை விழுங்கிய மகாதேவன் என்னும் கதையை வாங்கிப் படியுங்கள். இதன் விலை அணா 6.

## பஞ்சபாண்டவர் வனவாசம்.

இதேமாதிரியான பெரிய எழுத்தில் அச்சிட்ட சுத்தமான பதிப்பு படத்துடன்
இதன் விலை அணா 12.

# THE ENGLISH TEACHER

# ஆங்கில போதகன்.

இங்கிலீஷ் பாஷையை அதி சீக்கிரத்தில் கற்றுக்கொள்ள வேண்டுமானுல் ஆங்கில போதகன் என்னும் புத்தகத்தை வாங்கி வாசியுங்கள். அது உங்களை எழுதவும், பேசவும் தக்கவராகச்செய்யும். இவ்விதசிறப்புவாய்ந்த புத்தகம் வேறே கிடையாது. இதற்கு உபாத்தியாயர் வேண்டியதில்லை. ஆங்கில பதங்களுக்குச் சரியான தமிழ் உச்சரிப்பையும் எழுதப் பட்டிருப்பதால் ஒவ்வொருவரும் தாமாகவே வாசித்து ஆங்கிலத்தில் தேர்ச்சியடைவதற்கு ஆட்சேபனையில்லை.

கிளேஸ் கடிதம் காலிகோ பயிண்டு விலை ரூ 2.

---

எமது விலாசம்:—

**விநாயகம் அண்டு கம்பெனி,**

ஜூனே போஸ்டு, மதராஸ்.